# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ம் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - ௫] யாழ்ப்பாணம்:- நந்தன வருஷ வைகாசி மீ ௩ உ வெள்ளிக்கிழமை (16 May 1952) [இல - ௧௧]


## தேர்தற் காலத்தில் கடவுளுடைய நிலை என்ன?

### அறிஞர்கள் யாராயினும் விளக்குவார்களா?

இலங்கை சுதந்திரம் பெற்ற பின் ஐக்கியதேசியக்கட்சியினரே ஆட்சியை நடத்துகின்றனர். இக் கட்சியினருடைய ஆட்சியால் பல வசதிகள் நாட்டில் மலிந்திருக்கின்றன. மக்களிடையே சமாதானம் நிலவுகின்றது. இனியும் இக் கட்சியே ஆட்சிக்கு வரும். இவர்கள் ஆட்சிக்கு வராவிட்டால் பொதுவுடைமைக் கட்சியினருடைய ஆதிக்கம் மிகுந்து இந்த நாடு ருஷியருடைய ஆணையின் கீழ் வரும். கடவுள் வழிபாடு, சமய சுயாதீனம், தனிப்பட்ட மக்களுடைய சுயாதீனம் முதலியவை இல்லாமற் போகும் என்கின்றனர். ஐ. தே. கட்சிச்சாரார்.

சிங்கள மக்களோடு ஒத்துழைக்கவேண்டும். ஐ. தே. கட்சியே அவ்வொத்துழைப்புக்கு அநுகூலமாயிருப்பது. அக் கட்சியே எல்லா நன்மைகளையுந் தரக்கூடியதாயிருக்கிறது. அக் கட்சியோடு சேராவிட்டால் நிலைதளம்பித் தடுமாறி வழியறியாது வருந்த வேண்டி நேரிடும் என்கின்றனர் தமிழ்க் காங்கிரஸ்கட்சிச் சார்புடையோர்.

தமிழ்மொழி அழிந்துபோகும். தமிழ்மக்களுடைய பொருளாதாரம் சுருங்கும். நாடு முழுதும் சிங்கள நாடாகும். தமிழ் மக்கள் அடிமைகளாக வாழ வேண்டி வரும். ஆகையால் தமிழரசு வேண்டுமென்கின்றனர் தமிழரசுக் கட்சிச் சார்புடையோர்.

கட்சிப் பற்று மிகுந்தோர் தத்தம கட்சியின் கொள்கையே சரியென்று சாதிப்பர். கட்சிக் கயிற்றால் கட்டுப்படாமல் நின்று பார்ப்பவருக்கு ஒவ்வொரு கட்சியினர் சொல்வதிலும் உண்மையிருக்கிறதுபோலத் தோன்றுகிறது அப்படியானால் இப்படிப்பட்டவர் எக் கட்சியினருக்கு வாக்குக் கொடுப்பது? ஒன்றும் விளங்கவில்லை! கடவுளே துணை. இப்படி விளங்காத நேரத்தில் மாத்திரம் கடவுளே என்று சொல்வது எங்கள் வழக்கம்.

இருக்க, கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் ஒருபுறமிருக்க, கடவுள் நம்பிக்கையுடையவர்களாகிய சைவ, கிறிஸ்தவ, இஸ்லாமிய மக்கள் கடவுளைப்பற்றி என்ன சொல்லுகிறார்கள் என்பதைப் பார்க்கும்பொழுது, இந்தச் சிக்கலான நேரத்தில் கடவுள் என்ன செய்கிறாரென்று அறிந்தவர்களைக் கேட்க வேண்டியிருக்கு. சைவமக்கள் சொல்லுகிறார்கள் "அகரமுதல வெழுத்தெல்லாமாதி - பகவன் முதற்றேயுலகு" "அவனன்றி ஓரணுவும் அசையாது" கிறிஸ்தவ மக்கள் சொலலுகிறார்கள் "கடவுள் ஒருவரே உளர். அவர் எல்லாம் அறிபவர் அவர் சர்வ வல்லமையுள்ளவர்.' இஸ்லாமிய மக்கள் சொல்லுகிறார்கள், "வேறொரு கடவுளின்றிக் கடவுள் தாமே ஒருவராய், நித்தியராய், சுதந்திரராய் உயிர்கள் சீவனத்துக் காதாரமாயிருக்கிறார். அவருடைய அறிவு வானங்களுக்கும் பூமிக்கும் அப்பாற்பட்டிருக்கிறது."

இவற்றைச் சிந்தித்து இவற்றுடன் மேலே கண்ட மூன்று கட்சியினர் சொல்வதையுஞ் சிந்திக்கிறபொழுது பெருந் தடுமாற்ற முண்டாகின்றது. கடவுள் என்ன செய்கிறாரென்பது தெரியவில்லை.

இந்தப் பாராளுமன்றப் போட்டிகளிற் பல அறிஞர்கள் ஈடுபடுகிறார்கள். எம்போன்றவர்கள் குறித்த தடுமாற்றத்தை வெல்லுவதற்கு இந்த அறிஞர்கள் வழிகாட்டுவார்களா? ஐயன்மீர்! இந்த இன்னற்காலத்தில் கடவுள் எங்களுக்கு உண்மையாய் என்ன செய்கிறாரென்பதையறிந்து, எங்கள் நிலைமை என்னவென்பதையும் விளங்கி, குறித்த கட்சிக்காரருடைய சொற்களில் எவற்றைக் கொள்ளுவது எவற்றைத் தள்ளுவது சரியென்று கண்டு, நாங்கள் எங்கள் வாக்குச்சீட்டுகளைச் சரியாக உபயோகிக்க யாராயினும் நீதியான வழிகாட்டுவீர்களா?

"வழியறியா வழிப்போக்கன்"

---

உ

### அடியேன் உன் அடைக்கலமே!

திருச்சிற்றம்பலம்

வழங்குகின் றாய்க்குன் னருளாரமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின் றேன் விக்கி னேன்வினை யேனென் விதியின்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்தந் துய்யக்கொள்ளாய்
அழுங்குகின் றேனுடை யாயடி யேனுன் அடைக்கலமே.

திருச்சிற்றம்பலம்

---

### தேர்தலுக்காகும் திருக்குறள் 5.

கணைகொடி தியாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல்

**தேர்தற் புத்துரை:**

அபேட்சகர்களின் ஆள் உருவமும் நாவன்மையும் கண்ணைக் கவரக்கூடிய, செவியை இழுக்கும் பெற்றித்தாயன வாக, இருப்பினும் அவர்கள் செயல்கள் நேர்மாறுபாடாக இருத்தலும், இந் நிலைமை மாறுபாடாயிருத்தலும், தேர்தற் காலப் போக்கு என்க.

---

## 'தென்னாடுடைய சிவனே போற்றி'

### தமிழகத்தின் தனிச் சிறப்பு

சைவத் திருக் கூட்டங்களிலும் விழாக்களிலும் மக்கள் யாவரும் ஒருமித்து, "தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என முழங்குவதை நாம் கண்டிருக்கிறோம், கேட்டிருக்கிறோம், நாமும் அவ்வழகிய சொற்களை நாவார வழங்கியுமிருக்கிறோம். அவ்வாறு கூட்டத்தோடு கூட்டமாக முழக்கப்படுகின்ற அவ்வாசகத்தின் பொருளை உணர்ந்தவர்கள் எத்தனைபேர்? அங்குக் கூடியிருப்பவர்களிற் பெரும்பாலோர் அதன் கருத்துணராமலேயே முழங்குகிறார்கள் எனின் அது மிகையாகாது. அந்தப் பெரும்பாலோருக்கு அதன் பொருளைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற அவாவும் கிடையாது.

உலக முழுதும் ஒரு குடைக்கீழ் ஆளும் பேரரசன் ஒருவனை எடுத்துக்கொள்வோம். அவனது செங்கோல் செல்லாத நிலப்பரப்பு இல்லையென்றே சொல்லலாம். அத்தகைய அரசர்க்கரசன் தான் வசிப்பதற்கென்று ஓரூரினை — அல்லது ஓரிடத்தை விரும்பித் தெரிந்தெடுத்து அவ்வூரைத் தன் தலைநகராக ஆக்கி, அங்கு அமைக்கப்பட்ட அழகிய அரண்மனையில் வசித்து வருகிறான். அவன் தனது ஆட்சியெல்லைக் குட்பட்ட எப்பகுதியிலும் வசிக்க உரிமையுண்டு. எனினுந் தன்னுள்ளத்திற்கேற்ற இடத்திலேயே அவன் வசிக்கிறான்.

இவ்வுவமையைச் சற்றே உளத் திருத்திக்கொண்டு மேற்கூறிய அமுத வாக்கைக் கவனித்தால் அதன் பொருள் விளங்குவது எளிது. இறைவன் எந்நாட்டவர்க்குந் தலைவ

திருவள்ளுவர்

னாக இருக்கிறான். படைத்துக் காத்து இறுதியில் அழிக்கும் இயல்புடையனாகிய முழுமுதற் கடவுள் ஒருவனே உலவாத இறைமைத் தன்மையுடையவர் வேறு யாராயிருக்க முடியும்? எனவே முத்தொழில் புரியும் மூலப் பொருளாய இறைவன் எந்நாட்டவர்க்கும் இறைவனாயிருக்கின்றான். ஆனால் அப்பெருமான் தென்னாட்டையே தான் விரும்பி வசிக்கும் இடமாகத் தேர்ந்தெடுத்திருக்கிறான் என்னும் கருத்தை, "தென்னாடுடைய சிவனே போற்றி" என்ற அடி விளக்குகிறது. எனவே நீக்கமற எங்கும் நிறைந்துள்ள கடவுள் தென்னாடாகிய தமிழகத்தையே விரும்பி அதில் வசிக்கும் இயல்புடையனாயிருக்கின்ற ... தமிழகம் தனிப்பெருஞ் சிறப்புடையது என்பது வெள்ளிடைமலையன்றோ? அத்தகைய சிறப்புக்கள்தான் யாவை?

**நாடென்பதன் பெற்றி**

"நாடென்ப நாடா வளத்தன" என்பது தெய்வப் புலவர்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

---

### மா இலவசம்

வருகிற திங்கட்கிழமை தொடக்கம் அரிசிப் புத்தகங்களின்படி அரிசி வாங்காது மா வாங்க விரும்புவோருக்கு மா இலவசமாகக் கொடுக்கப்படும். அதிகாரிகள் கடைக்காரருக்குத் தக்க அறிவித்தல் கொடுத்திருக்கின்றனர்.

---

அரசியல் அலை

## தேர்தல் வசந்த மாருதத்தில் வதந்திக் காற்றாடி

### விண் பூட்டிவிடும் அநுதாபிகள்

கேட்டீர்களா கதையை! அபேட்சகர் கண்ணன் ஓடிவிட்டாராமே. ஆகவே அபேட்சகர் விண்ணன் வருவது நிச்சயமாய் விட்டதாமே! என்றார் திரு வாயாடி. திடுக்கிட்டார் திரு பொதுசனம்.

ஆனால் திரு. பொதுசனம் பின்வாங்கவில்லை, என்ன இப்போது சிறிது முன்பாகவே நான் கண்ணாற் கண்ட கண்ணன் ஓடிவிட்டார் என்று நம்ப முடியவில்லையே. அன்றியும் அவர் ஓடிவிடத்தான் என்ன அவசியம். அவருக்குத்தான் வெற்றி நிச்சயமென்னுகிறார்களே, ஆர் ஐயா உங்களுக்குச் சொன்னார். திரு. வாயாடி குயுக்திக்காரன்சொன்னார் நான் கேட்கவில்லை. புகைரதத்திற் பேசிக்கொண்டிருந்தார்கள். அதைத்தான் நான் உங்களுக்குச் சொன்னேன்! பொய்க்கதைபோலும்.

என்ன பிரமபுரத்தில் ஒரு வாக்கும் எடுக்கமாட்டாராமே கண்ணன் என்றார் திரு. வாயாடி. காரணம் கேட்டார் திரு பொதுசனம். பிரமபுர வாக்காளர்களைக் காணப் போனார் கண்ணன், ஆனால் முதல் முதற் கண்டவர் அந்தவூரவர் அல்லவாம் அதனால் ஊரவர்கள் சிறிச் சினந்து விட்டார்களாமே.

கண்ணனுக்குக் கட்டுக் காசு கிடைப்பது முடியாத காரியமாம் என்றார் திரு. வாயாடி. நியாயம தேர்தலிற் கொட்டக் காசில்லையாமே. சுற்றும் என்றாலும் சும்மா கிழமா சுயம்வரம என்று பழமொழியைப் பழிமொழியாய்ச் சொன்னார் திரு வாயாடி.

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ். நந்தன ௵ வைகாசி ௴ ௩ ௨ வெள்ளிக்கிழமை

## அரசியல் அறநெறி

### தெய்வந் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்

காலப்போக்கின் வேகம் கடவுளுக்குப் பரிபாலன எல்லையை வகுத்துவிடும் போல இருக்கின்றது. அரசியல் என்றால் அது அறநெறிக்கமையாததும், நீதி ஒழுக்கத்திற் கப்பாற்பட்டதுமா யிருத்தல் வேண்டும் என்று அநேகர் அபிப்பிராயப்படுகின்றனர் போலும். என்னை! இவர்கள் அரசியலுக்கும் சமயவியலுக்கும் அணுவளவேனும் சம்பந்தம் இல்லை என்று நினைப்பதுவே.

அகில உலகினும் இதுவரை இருந்த முடியரசெல்லாம் இறைவன் இன்னருளை முனனிட்டு இயங்கி வந்தனவென்பதைச் சரித்திர ஆராய்ச்சியாளர் உண்மைப்படுத்துவர். முடியாட்சிமுடிந்து குடியாட்சி தொடங்கிய நாடுகளிலும் தடி அடி முறையைக் கையாளாதவைகள் என்றும் போல இறைவன் திருவருளை எதிர்பார்த்தே செங்கோல் நடத்துவது நாம் நேரடியாக அறியக்கூடிய தொன்று.

ஒவ்வொரு நாட்டு மக்களும தாம் அமைக்கும் அரசாங்கம் தங்கள் பண்பாட்டுக்கியையவே நிறுவுவார்கள். ஆசிய தேசங்களில் ஆங்காங்குள்ள நாகரிகச் சூழலின் செழிப்பிலேயே குடிஆட்சிமுறை வேரூன்ற வேண்டியதாக இருக்கின்றதென்பதை அந்நாட்டு அமைச்சர்களின் உரைகள் நன்கு புலப்படுத்துகின்றன.

இலங்கை நாட்டை எடுத்துப் பேசுமிடத்து இலங்கையுள்ளாரின் பழம் மரபுக்கியைந்த ஒரு அரசியல் அமைக்க வேண்டுமேயானல் ஈழநாட்டுச் சரித்திரத்தையும் இந் நாட்டிலுள்ள பலவேறு சாதியினரின் கலாசாரச் செம்மையையும் பொதுவாக மத நெறி விதிகளையும் நன்கு ஆராய்ந்துபார்த்தல் வேண்டும்.

இந்துசாதனப் பத்திரிகை தமிழ் பேசும் மக்களுக்குரியதாகையாற் செந்தமிழ் நூல்கள் செப்பிப் போந்த அறமொழிகளை நேயர்களுக்கு எடுத்துரைப்பது எங்கடமையாகின்றது

இந்த இதழிற் பிறிதோரிடத்தில் இளங்கோ அடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்திலே மன்னருக்கு வரங்கொடுத்த வரலாற்றிலே அரசியல் அமைப்புக்குரிய அரிய அறநெறியைக் கனிந்த தமிழில் இனிமையாயுரைத்ததைப் பிரசுரித்திருக்கின்றோம். ஆங்கு கூறப்பட்ட ஒவ்வொரு புத்திமதியும் செங்கோலாட்சிக்குச் சிறப்பாக வேண்டப்படுவதென்பதை எவரும் மறுக்கமாட்டார். அரசியல் ஆழியில் அலைகள் கொந்தளித்துக் குமுறிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் எமக்கு நல்வழியைக்காட்டும் கலங்கரை விளக்கம் போன்று துலங்கும் செம்மொழிச் சுடரில் ஒன்றை மாத்திரம் இங்கு நாம் பிரத்தியேகமாகக் குறிப்பிட விரும்புகின்றோம். ‘தெய்வந் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்’ என்ற உய்யும் வகை உரையை உள்ளத்திலே ஊன்றி ஆராய்வோமாக.

மணிவாசக அடிகளும், ‘தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி’ என்று அரன் அருள் சுரக்க உரைத்த அமுத மொழிகளை நாம் மனத்தில் அமைத்துவிட்டால் அதுவேபோதும். ‘அவன் அருளாலே அவன் தாள் வணங்கி’ என்று வாதவூரடிகள் மணிவாக்கை நோக்குமிடத்துத் தமிழகத்திலே நிகரில் இறையை அகத்தே எண்ணாது எக் கருமத்தையும் இயற்ற எம்மனோரால் முடியாதென்பது வெளிப்படையாகின்றது. ஆகவே ஈழநாட்டு அரசியல் அமைப்புக்கு அறநெறி இன்றியமையாததென்பதும் அறநெறியென்றால் அது இறைநெறியேயென்றும் போதருகின்றது. இலங்கை வாழ் மக்கள் தங்களைத் தாமாகவே பரிபாலனஞ் செய்கின்ற பாக்கியத்தைப்பெற்றதும் இறை அருளால் என்ற உண்மையை மறந்துவிடாது இறைவன் இன்னருளை வேண்டிச் செங்கோலாட்சிக்கு அமைய வேண்டிய இலக்கணங்களை எல்லாம் எங்கள் பழந் தமிழ் மரபு விளக்கும் நாவலர்கள் இயற்றிய கலைக்களஞ்சியத்தில் ஆராய்ந்து அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகின்றது. அஃதன்றித் தெய்வம் இகழ்மின் இகழ்ந்தோர்ப் பேணுமின்’ என்ற கொள்கையை உடைய அரசியற் கட்சிகள் அமைக்கக்கூடிய அரசாங்கம் எவ்விதமாக இருக்கும் என்று தமிழன்னையின் தவப்புதல்வர் ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டியது. துன்பமும் நோயும் இல்லாதொழியவும் இன்பமும் இயல்பும் நல்லாயமையவும், அன்பும் ஆதரவும் எங்கும் எல்லாரிடத்தும் உண்டாகவும் ஒற்றுமை ஓங்கவும் வேற்றுமை நீங்கவும் ஒரு அர[illegible] இறைநெறி என்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லான் நமை ஆள்வான் நல்ல நகரானே

### திருநல்லத் தலச்சிறப்பு

நாகத் தணையானு நளிர்மா மலரானும்
போகத் தியல்பினாற் பொலிய வழகாகும்
ஆகத் தவளோடு மமர்ந்தங் கழகாரும்
நாகம் மரையார்த்தா னல்ல நகரானே.

இது காவிரித் தென்பால் முப்பத்து நான்காவது திருத்தலம். மேல்பால் வைகல் திருத்தலத்துள் ஸ்ரீதேவியம்மையார் பூசித்துப் பேறுபெற்றமை போல, பூதேவியம்மையார் பூசித்து வழிபட்டுப் பேறுற்ற சிறப்புடையது இது. இறைவனை நாடி, போகம் பெரும் இயல்பினாலே திருமாலும் பிரமனும் கூட இங்கு வழிபட்டுள்ளனர் எனத் திருஞானசம்பந்தர் திருப்பதிகத்தாலும், இயமதூதுவர் வருங்காலம் என்செயவீர் வீணே காலம்கழியாது பூச்சுமந்த தலையராகி உமாமகேசனைப் பணிமின் பணிவாரோடு சேர்மின் மேலாம் கதியினைச் சாருமின சாருவீராயின் அப்பெற்றிமை நமக்கு நல்லது எனத் திருநாவுக்கரசர் திருப்பதிகத்தானும் போற்றி அருளப்பெறும் சிறப்பினது.

இறைவன் — உமாமகேஸ்வரர். இறைவி - மங்களநாயகி. இங்கு நடராஜப்பெருமான் மிகப் பெரிய அழகிய திருவடிவினர். இத்தலம் தறபோது கோனேரிராஜபுரம என வழங்கப்பெறுகின்றது. ஆடுதுறை புகைவண்டி நிலையத்திலிருந்து தென்கிழக்கே ஏழு மைலில் உள்ளது.

கொல்லத் தானம ணார்தமர் வந்தக்கால்
இல்லத் தார்செய்ய லாவதே னேழைகாள்
நல்லத் தானமை யாளுடை யான்கழல்
சொல்லத் தான்வல்லி ரேறுயர் தீருமே.

## அரசியற் பெருநெறி

### தமிழன் கண்ட தனி நெறி

தேரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்
பரிவு மிடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வந் தெளிமின் றெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை யஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமின்
ஊனூண் டுறமின் உயிர்க்கொலை நீங்குமின்
தானஞ் செய்மின் தவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின் றீநட் பிகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருண்மொழி நீங்கன்மின்
அறவோர் அவைக்களம் அகலா தணுகுமின்
பிறவோ ரவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை யஞ்சுமின் பிழையுயி ரோம்புமின்
அறமனை காமின் அல்லவை கடிமின்
கள்ளுங் களவுங் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினி லொழிமின்.

—இளங்கோ.

## இந்திய தேசாதிபதிகள்

ஸ்ரீ ஜயராமதாஸ் அசாம் இராச்சியத்திற்கும், ஸ்ரீ R. R. டிவாக்கர் பீகாருக்கும், ஸ்ரீ கிராஜசங்கர் பஜாபி பம்பாய்க்கும், ஸ்ரீ சாயிட்பசால ஒறிசாவுக்கும், ஸ்ரீ C. M. திருவேதி பஞ்சாப்புக்கும், ஸ்ரீ K. M. முன்சி அற்றபிரடேஸ்கும். Dr. H. C. முக்கர்ஜி மேற்கு வங்காளத்துக்கும் தேசாதிபதிகளாக நியமிக்கப் பட்டிருக்கின்றனர்.

## மா நன்கொடை

கொழும்புத் திட்டப் பொருளாதார உதவி முறையில் அவுஸ்திரேலியா இலங்கைக்கு 5000 தொன் மா இலவசமாக அனுப்புகின்றது.

## பொதுவுடைமை ஒழிக்க வழி

மலாயா நாட்டு அரசாங்க அதிகாரி சேர் ஜெரூல்ட்ரெம்ப்லர் அவர்கள் மலாயாவிற் பொதுவுடைமையை ஒழிப்பதற்கு வழியென்ன வென்று சுத்தானந்த பாரதியாரைக் கேட்டார். பிள்ளைகளையும் அவர்களுடைய பெற்றாரையும் முறைபாகப் படிப்பித்தலே வழியென்று விடையிறுத்தார் பாரதியார்.

## தேவை

கொட்டகை வேயத்தக்க நல்ல நிலைமையிலுள்ள தகரம் தேவை.. முந்தி உபயோகிக்கப்பட்டதா யிருக்கலாம். மனேஜர்
இந்துசாதனம்

## பொதுவுடைமைக் கட்சியினருக்குதவி

### பொல்லாத பாதகமாம்

இத்தாலிய ரோமான் கத்தோலிக்க குரு சிரேஷ்டக் குழுக்களில் இருபகுதியார் கத்தோலிக்க வாக்காளர் இத்தாலிய நகரசபைத் தேர்தலில் பொதுவுடைமைக் கட்சியினருக்கு வாக்களித்தால் அச்செய்கை அதி பாதகமாம் என்ற எச்சரிக்கை செய்திருக்கின்றனர்.

### வரைதல் ஆசிரியர்களுக்கு வேதன உயர்ச்சி

தமிழ் சிங்கள மொழிகளில் வரைதலிலே தராதரம் பெற்ற ஆசிரியர்களுக்கு வேதன உயர்வு கொடுப்பதாக நிதி மந்திரி தீர்மானித்திருப்பதாகவும், ஆங்கில, தமிழ் சிங்கள மும்மொழிவரைதல் ஆசிரியர்களுக்கு ஒரு பொதுவான பரீட்சை வைப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பெற்றதாகவும் அறிகின்றோம்.

## இந்திய பாராளுமன்ற சபாநாயகர்

திரு. G. V. மவ்லங்கர் அவர்களுடைய பெயரை இந்திய பாராளுமன்ற சபாநாயகர் பதவிக்கு இந்திய தேசிய மகாநாட்டார் ஏகமனத்துடன் அங்கீகரித்திருக்கின்றனர்.

## தொற்று நோய்த் தொந்தரை

1951 ம் வருடத்தின் அறிக்கையின்படி இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கள்ளமார்க்கமாக வரும் பொது சனங்களால், இலங்கையில் இப்பொழுது அம்மை, குஷ்டரோகம் போன்ற கொடிய வியாதிகள் பெருகுகின்றன என்ற சுகாதார மேலதிகாரி Dr. W.G. விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

அம்மை வியாதி இலங்கையில் முக்கியமாகத் தென்மாகாணத்தில் காலிப்பகுதியிலும், வடமாகாணத்தில் வல்வெட்டித்துறை, புங்குடுதீவு முதலிய இடங்களிலுமேயே அதிகமாகப் பரவி இருக்கின்றது.

இலங்கையில இப்பொழுது குஷ்டரோகமும் அதிகம் பரவி இருக்கின்றது. அதிலும் இலங்கையில்உள்ள இந்தியரையே இந்நோய் அதிகமாகப் பாதிக்கிறது. ஆகலால் போககுவரத்துச் செய்வோர் மிகவும் புனிதமானமுறையில் போக்குவரத்துச்செய்து தொற்றுநோய் தம்மைப் பற்றுவண்ணம் தம்மைப் பாதுகாக்கவேண்டும்.

# தென்னாடுடைய சிவனே போற்றி

(முதற் பக்கத் தொடர்ச்சி)

வாக்கு. வளமொன்றுமே நாடாமல் மூற்றிய வறுமையில் வாடுவது நாடல்ல! வேற்று நாட்டினை எதிர் நோக்காமல் பல்வகை வளங்களும் பாங்குலத் தன்னகத்தே பொருந்திச் செழித்திருப்பதுவே நாடாகும். வள்ளுவர் கூறிய பெருமையில் தமிழகம் தலைசிறந்து விளங்கிற்று! ஆயிரக் கணக்கான ஆண்டுகட்கு முன்னர் நமதுநாடு எப்படியிருந்தது என்பதை அக்காலத்தே தோன்றிய இணையற்ற காவலங்களாகிய இலக்கியங்களை சான்று கூறும். வள்ளுவப் பெருந்தகை, தான் வாழ்ந்த காலமாகிய பொற்காலத்தில், தமிழகத்தின் உயர் நிலையைத் தானே நேரில் கண்ட பெருமிதத்தினால்

"நாடென்ப நாடா வளத்தன"

என்று கூறுகின்றானன்றோ? இதற்குப் பொருத்தமாகச் சோழநாட்டின் தலைநகரான 'புகார்' நகர் நம் மனக்கண் முன் வந்து நிற்கின்றது. இந்நகரத்தின் சிறப்புக்களைப் பட்டினப்பாலையால் நனகறியலாம். இத்துணைப் பெருமை வாய்ந்த இந்நகருக்குப் பெயர் வந்த காரணத்தைக் கவனிப்போம். பகைவர் இதன் பாதுகாவற் சிறப்பினாலும் சோழனின் பெருமையாலும் புகார்க்குள் புக அஞ்சுவர். எனவே பகைவர் புகாத தன்மையால் புகார் என்று பெயர் வந்தது. மற்றொன்று, பல்வகை வளமும் வாய்ந்து செல்வங் கொழிக்கும் பயங்கெழு நகரமாகப் புகார் நகர் அமைந்திருத்தலின் அந்நகர மாந்தர் எந்தப் பொருளின் — பொருட்டும் அயல நாட்டில் புகார் என்பதாகும். அதாவது புகாரில் இல்லாத பொருள் உலகிலேயே இல்லை.

## வள்ளுவ இலக்கணம்

இவ்விருவகைப் பெயர்க் காரணத்துள் இரண்டாவது காரணமே தனிசிறந்தது. இத்தகைய எடுத்துக் காட்டுகளால் பண்டைத் தமிழகத்தின் "நாடா வளத்தனை" நனகுணரலாம். இன்று வள்ளுவனாரின் இலக்கணப்படியமைந்த நாடு எங்குமில்லை. மிகவும் உயர்வாகப் பேசப்படுகின்ற அமெரிக்கா, இரஷ்யா என்ற நாடுகள்கூடச் சில பொருள்களை அயல்நாட்டினின்றும் இறக்குமதி செய்தே ஆகவேண்டும் என்ற நிலையிற்றான் உள்ளன. எனவே நம் செந்தமிழ் நாட்டைப்பற்றிச் செப்பவேண்டுவதேயில்லை.

எனினும் தமிழகம் இன்னும் பெருங்காயப் பாண்டம் போலத் தனது தனித்தன்மையைக் காப்பாற்றித்தான் வருகிறது. வேற்று நாட்டிலிருந்து வரும் உலகச் சுற்றுப்பிரயாணஞ் செய்யும் அறிஞர்கள் ஒருமுகமாகத் தமிழ் நாட்டைப் புகழ்வது நாமறிந்ததே. வறுமையற்ற உயர்ந்த நாகரிகம் பெற்ற நாடுதான் நற்கலைகளை உற்பத்தி செய்ய இயலும். அகிலம் வியக்கும் கலைகள் அனைத்தும் நம்தமிழகத்தில் தான் தோன்றின. இன்றும் மேனாட்டறிஞர் இந்தியப் பிரயாணத்தை மேற்கொண்டால், தமிழ்நாட்டின் கலைச்சிறப்பைக் கண்டு போற்றாமல் திரும்பிச் செல்வதில்லை. எனவே உலகங் காணாத உயர்கலைக் கிருப்பிடம் தமிழகம் என்றால் அது முற்காலத்தில் எத்தகைய வளத்தோடு விளங்கியிருக்க வேண்டும்? "இரப்பாரில்லாமையால் ஈவாருமில்லை" என்ற பெருமைக்கிருப்பிடமாயமைந்திருந்ததன்றோ நம தாயகம்?

## வளர்வாய்ந்த நாடு

இறைவன் விரும்பி வசிக்கும் பெருமை தென்னாடாகிய தமிழ் நாட்டிற்குக்கிடைத்ததென்றால் அந்நாடு எல்லாவளமும் பெற்றுத் திகழ்ந்து நற்கலைகளைத் தோற்றுவித்துப் புகழ் நிறுவியதில் வியப்பென்னே! முடியுடை மூவேந்தரின ஆட்சியில் இப்ப உலகமாம் சுவர்க்க காட்டாப்பத் திகழ்ந்தது. தமிழகத்தைப்போன்று வேறெந்த நாட்டில் இத்துணைக் கோவில்கள் எழுப்பட்டன? தமிழரசர்கள் இப்பெரும பணியில் இறைவனுக்குக் கோயிலமைக்கும் பெரும்பணியில் — வாழ்நாள் முழுதும ஈடுபட்டிருந்தனர் எனின், அப்போதிருந்த மக்களின் மனநிலையும், அரசர்களின ஆற்றலும், அமைதியும விளங்குகின்றனவன்றோ? இடற்விழுந்த இடமெல்லாம் இறைவன் கோவிலைக்காணப்படும் தமிழ்நாட்டில் கடவுள் வாசம் செய்வதில் ஐயமொன்றுமில்லை. சந்தனக் கட்டைகள் அடுக்கப்பட்டுள்ள இடத்தில் சாக்கடை நாற்றம் தலைகாட்டுமா? அதுபோல் தெய்வமணம் கமழும் தமிழகத்தில் அக்கிரமங்கள் குறைந்து, அன்பும், அடக்கமும், கற்பும் விருந்தோம்பலும் அதிகரித்திருந்தன. இவ்வளவிருக்கும் மேலாகத் தெய்வத்தன்மை வாய்ந்து உலகிலேயே உயர்ந்த தீந்தமிழ் மொழி தமிழனுக்குத் தாய்மொழியாயமைந்தது.

அண்மையில் நடந்த உலகப் போரில் நம்மைப் பயமுறுத்திய ஜப்பானியர்கள் தமிழக எல்லைக்குள் தவறிக்கூட ஒரு வெடி குண்டைப் போடவில்லை. கல்கத்தாத் துறைமுகத்திலும், விசாகப்பட்டினக் கடலிலும் விழுந்ததாகக் கருதப்படும் வெடி குண்டு, தமிழ்த்துறைமுகத்திலோ, தமிழ் நகரங்களிலோ ஏன் விழக்கூடாது? ஆம். அதுதான் தமிழகத்தின் தனிச்சிறப்பு. "தென்னாடுடைய சிவனே" என்பதன் கருத்து இப்போது தெற்றெனத் தோன்றுகின்றதன்றோ?

## சுகாதார இலாகா மருத்துவப்பயிற்சி

நடக்கப்போகும் சோதனைக்கு முன்னிட்டு 15-2-52ல் அரசாங்க "கசெற்றில்" பிரசுரந்திருந்த பெண் மருத்துவப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கும் பரீட்சை 31-5-52ல் இருந்து ஆனிமாதம் 14-ந் திகதிக்கு (14.6.52) ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

இங்ஙனம்,

Sgd L. G. BLAZE

சுகாதாரப்பகுதி அதிபர்.

G. 6 16—5—52.

## ஏல விற்பனை

வட்டுக்கோட்டை மேற்கில் அடைவு பிடிக்க உத்தரவு பெற்ற செல்லப்பா இராசதுரை அவர்களின் வீட்டில் 1949-ம் ஆண்டு தை மாதம 30ந் திகதி வரையில் அடைவு வைத்து மீட்கப்படாத நகைகளை மேற்படியார் வீட்டில் அவர்களின் அனுமதியின்படி 1952-ம் ஆண்டு வைகாசி மாதம் 26-ந் திகதி திங்கட்கிழமை மேற்படி கூறப்பட்டவர் தலத்தில் மாலை 2 மணியளவில் என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

பொ. அப்பையா
ஏலவிற்பனவுகாரர்
சொக்குவில்
15-5-52.

M. 29 16, 20—5—52.

## விற்பனவுக்கு

2400 மைல்கள் சொந்தப் பாவிப்பில ஓடினதுமான மிகவும் உயர்தரமான ஒரு A40 (CL 7000 இலக்க வரிசையிலுள்ள) கார் ரூபா 6500க்கு குறையாமல் விற்பனவுக்கு வவுனியா சிங்களப் பகுதி பிரிவுக் காரியாதிகாரியின் வீட்டில் இருக்கிறது.

M 26 6, 9, 13, 16—5—52.

## காணிக்கை

(தென்இந்தியா) திருநெல்வேலி இட்டமொழி பஞ்சாங்க கணிதர் திரு. சிவசூரியநாராயண பிள்ளை அவர்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருந்தகைக்குச் செய்யும் நல் வணக்கக் குறியாக இந்துசாதனத்துக்கனுப்பிய ரூபா ஐந்து (5/=) அன்புடன் ஏற்றும்.

## இலங்கை இந்தியர் நிலைமை

### ஸ்ரீ இராஜகோபாலாசாரியர் கருத்து

சென்னை அரசாங்க சபையிலே இலங்கை இந்தியருக்கு அநுதாப உரை கூறி ஓர் பிரேரணை ஏகமனதுடன் நிறைவேற்றப்பட்டது. அச்சமயம் ஸ்ரீ இராசகோபாலாசாரியர் அவர்கள் பேசுகையில், அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் போனபொழுது ஆங்கிலேயர் தங்கள் பாஷையையும் வாழ்க்கைப் பண்பாட்டையும் கொண்டுபோனதுபோல இந்திய மக்கள் இலங்கைக்குப் போயிருக்கின்றார்கள். அங்கே அவர்கள் தங்கள் முழுமனதோடும், முழு இருதயத்தோடும் அந்நாட்டின் முன்னேற்றத்துக்கு உழைத்திருக்கிறார்கள். ஆகையினாலே அவர்களைப் பிறதேசத்தவராக இலங்கை மக்கள் மதிக்கக்கூடாது. அவ்வாறு பிழையாய் நினைப்பதுதான் இவ் விஷயத்தில் அத்திவாரமான கொள்கைப் பிழையாயும் பெருந் தீமையாயும் இருக்கின்றது. இதை எதிர்த்தே நாம் போராடுகின்றோம்.

இவ் விஷயத்தில் பொறுமை தேவை. அபாரசக்தியாய் நிலவுகின்ற பிரதம மந்திரி ஸ்ரீ நேரு அவர்கள் கையாளுதற்கு இது விடப்படவேண்டியது.

இலங்கை இந்தியருக்கு இந்தியாவிலே தொடர்பின்மையாலே அவர்களை இந்தியராகக் கருதுதல் பெரும் பாதகமாகும்! அவர்களை நாங்கள் திருப்பி அழைக்க முடியாது. ஒருபோதும் அப்படிச் செய்யமாட்டோம். அவர்கள் இலங்கைப் பிரசைகளாயிருப்பார்கள். அல்லது தொந்தரவுக்கு ஏதுவானவர்களாய் அங்கேயே வாழுவார்கள் என்பதை நாம் தெளிவாகத் தெரிவிக்கவேண்டும்.

## வேண்டாத உறுப்பு

சோறு, தாவரக் கறி முதலிய உணவை உட்கொள்ளுகிறவர்களுக்கு மிகையான உள உறுப்பு வளர்ச்சி நோய் ஏற்படுவதில்லை. இத்தகைய உணவை ஆசிய ஆபிரிக்க மக்கள் உட்கொள்ளுதலால அவர்களுக்கு இந்நோய் உண்டாவது குறைவு. ஆனால் அவர்களும் ஐரோப்பியர் உண்ணுகிற பிற உணவுகளை உண்ணும்பொழுது அவர்களுக்கும் இந்த நோய் உண்டாகிறது என்று ஒரு ஒல்லாந்த வைத்தியர் கூறுகின்றார். எம் நாட்டவர் உட்கொள்ளவேண்டிய உணவுப் பொருட்கள் எம் நாட்டில் இயல்பாக உண்டாகின்றன. அவற்றை உட்கொள்ளுதலை பண்டுதொட்ட வழக்கமுமாயிருக்கவும் பிற உணவுகளை உட்கொண்டு பேரின்னல்களை வரவழைக்கும் எம்மவர் பழக்கம் ஒழிக்கவேண்டியதென்பது மேலே கண்ட அறிஞர் அநுபவ மொழியால் அறியவரும்.

## நீதிபதி பதவியும் வெறுத்தல்

தென் ஆபிரிக்க அரசாங்கத்தின் நிறதுவேஷ நீதியீனச் சட்டத்தை நிராகரித்தது உயர் நீதிமன்றம். உயர் நீதிமன்றத் தீர்ப்பை நிராகரிக்க வழி தேடுகிறார் மலான். அத்தகைய நீதியீனமான அரசாங்கத்தில் உயர் நீதிமன்றப் பதவியே வகிக்க மறுக்கின்றார் திரு. A. H. புறூக்மா (QC) என்னும் பிரபல ஆபிரிக்க கியாயவாதி, உண்மைவழி வாழ்வோரின் உள்ள நிலை இதுவாகும்.

# உங்கள் நக்ஷத்திரம்?

ஸ்ரீ ராதா கிருஷ்ணன்
கணிப்பது.

எங்கள் சோதிடம்

இவ்வாரப் பலன்கள் 18—5—52——24—5—52

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

உத்தியோகப்பகுதியில் சிறிது வெற்றிகரமானவாரம். ஆனுகூடும் பசமாதானம் தூரத்திற்றான் நிற்கும். மனோராச்சியத்தினால் உண்டாகும் வியாபார முயற்சிகளைத் தவிர்த்தல் வேண்டும். ஒரு விதமான வாக்குறுதியும் செய்து கட்டுப்படவேண்டாம்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

இந்த வாரம் தேககசுகத்தைப் பாதுகாக்கவும், சிறு உத்தியோகத் தொந்தரவுகளும் உண்டாகக்கூடும் வேலைக்காரர் சிறிது கோபம் மூட்டக்கூடும். பண நட்டத்துக்கு மிடமுண்டு.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3.

வியாபார முயற்சியுள்ளவராயிருந்தால் இந்தவாரம் நல்ல இலாபமுண்டாகும். போட்டியிடுவோரை வெல்லுதலும் புகழும் நிச்சயம். நெடுங்காலம் விரும்பியிருந்த ஒன்றைப் பெறக்கூடியதாயிருக்கும். பெண்ணின நண்பர்களால் உதவியும் நிச்சயம்.

**கடகராசி** புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.

இந்த வாரம் மேலதிகாரியோடு பிணக்குண்டாகக்கூடும். அபகீர்த்திக்கும் இடமுண்டு. சகோதர சகோதரிகளால் அதிக பணச்செலவுண்டாகக்கூடும். புது முயற்சிகள் நேர்முகமாய்ப் பார்க்கவேண்டும். அல்லது பண நட்டமுண்டாகக்கூடும்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம். 1ம் பாதம்.

வாரத்தின் முதல்மூன்று நாட்களிலும் மிகக்கவனமாயிருக்கவேண்டும். தேகசுகவீனத்துக்கிடமுண்டு. பின்பு திருந்தும். வார இறுதிக்கு முன் இன்பகரமான கடிதங்கள் அல்லது செய்திகள் வரும்.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம அத்தம சித்திரை 1, 2ம் பாதம்.

இந்தவாரம் நீர்க்காலோசியாது ஒன்றுந் தீர்மானிக்க வேண்டாம். புதனும் வியாழனும் வெள்ளிகாலையும் சில தொந்தரவை உண்டாக்கக்கூடும். மிகக் கவனமாயிராவிட்டால் மிகப்பிழையான பலன்கள் வரக்கூடும். வாரத்தின் கடைசி நாள் மாற்றங்களுக்கு நல்ல நாள்

**துலாம்** சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்

வாரத்தின் இறுதி இரண்டு நாட்களையுந் தவிர இந்த வாரம் உத்தியோகம் அல்லது வியாபாரத்துக்கு நல்ல காலம். உற்சாகந்தரும் புதினத்துக்கும், நண்பருடைய உதவிக்கும் இடமுண்டு. வெள்ளி, சனி, சில குடும்பப் பிணக்குகளையும பணச்செலவையும் உண்டாக்கக்கூடும்.

**விருச்சிகராசி** விசாகம் 4-ம் பாதம அநுஷம், கேட்டை.

இந்த வாரம் விறுவிறுப்பாய்ச் செயல்களைச் செய்து பின் துன்பப்படவேண்டிவரும். குடும்ப விஷயங்கள் சமாதானமாயிருக்கமாட்டா. இனத்தவர்கள் கோபம் உண்டாக்கக்கூடும். ஆனால் வார இறுதியில், போட்டியிடுவோரை வெல்லுதல் நிச்சயம்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

சிறு சுகவீனத் தொந்தரவுகளைத் தவிரப் பொதுவாக நல்லவாரம். சில நாட்களுக்குள் ஒரு சிறந்த காணி விஷயம் சித்தியடையக்கூடும். வார இறுதியில் மனத்தில மதித்தபடி இலாபமுண்டாகும்.

**மகரராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம அவிட்டம் 1, 2ம் பாதம்.

புது முயற்சிகள் ஆறுதலாய், ஆனால், திடமாய் முன்னேறும் நண்பர்கள் அதிகம் உதவி பண்ணுவார்கள். சிறிதோ பெரிதோ பிரயாணமொன்றுக்கிடமுண்டு. சட்டத்துறை முயற்சிகளால் இலாபமுண்டாக இடமுண்டு.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம.

ஏற்றமும் இறக்கமும் உள்ள வாரம். எதிர்காலத்தைப் பார்த்து, புது எண்ணங்களில் ஊக்கம செலுத்துக, சித்திபெய்த இடமுண்டு. பழைய நண்பர்களும் இனத்தவர்களும் சிறிது பணச்செலவுண்டாக்கக்கூடும். ஆனால் வார இறுதியில் சில தன இலாபங்களுக்கிடமிருக்கின்றது.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

அணிமையிற் சென்ற காலத்திலும், வருங்காலம்பணவரவுக்குநல்ல காலம். திடசித்தமும் தீவிர முயற்சியும உண்டாகும், புது முயற்சிகள் விரும்பிய நன்மையைத் தரும் வார இறுதியில் ஒரு இளம் நண்பரைப்பற்றிச் சிறிது சலனமுண்டாக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் இளமைப்பருவத்தை அடைய
சி. எம். சாமி

# தங்கபஸ்பம்

உபயோகியுங்கள்
தாதுபுஷ்டியைத் தருவதில் சிறந்தது.
இதற்கு நிகரானமருந்து வேறு ஒன்றுமில்லை.

அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், இரதத விருத்தியும் உண்டாக்கும். இல் வாழ்க்கையில் அதியற்புத சுகந்தரும. நீரழிவு, பவுததிரம, மூலம், குன்மம, இடுப்புவலி, வாய்வு, வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளேயும் நீக்கும,

24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ. 25—0—0

## குருபஸ்பம் (தொய்வுக்கு)

தொய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு தொண்டைவலி, க்ஷயம் முதலிய சகல வியாதிகளையும நீக்கும். அருமையானது.

24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20

மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S I
(கோட்லாக் இனம்)

M. 16. 20 4-52—25-10-52.



L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
=0=

தந்தி: "JEWELLERS"
போன்: 161.

கிளைத்தானம்:
63, கன்னுதிட்டி
யாழ்ப்பாணம்.



# யாழ்ப்பாணம ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந் தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49. சிருப்பர்.



Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Friday, 16 May, 1952.


## அரசியல் அலை

1-ம் பக்கத் தொடர்ச்சி

அதுமாத்திரமா அந்தப் போத்தல் அலுவல் இருக்கிறது. வாயாற் போதை உண்டுசெய்யப் பார்க்கிறர்களே அல்லாமல் எங்கள் வாயாற் பருக மது வருகிறதாய்க் காணவில்லையே. கட்டுக்காசு வேண்டுமென்றுற் புட்டி உடைக்க வேண்டும் என்று புராணம் சொல்லி முடித்தார் வாயாடி.

கண்ணனுக்கு அடிகிடைத்ததாமே என்றுர் வாயாடி. விண்ணனுக்கு உதை விழுந்ததாமே என்றுர் குட்டி வாயாடி. மூண்டுவிட்டது யுத்தம். கண்ணனும் விண்ணனும் அக்கியோன்யம் வாயாடியும் குட்டி வாயாடியும் கும்மாளம்.

இப்படியாக வதந்திக் காற்றுடியால் தேர்தல் அபேட்சகர்களை நரம்பு தளரச் செய்யும் நோக்கமாக நூறு நூறுயிரம் பொய்ப்பிரசாரமும் பொல்லாப் பேச்சும் ஒவ்வொரு கிமிடமும் உருவாகின்றன. திருவிழா முடிந்து தேர் இழுத்துத் தீர்த்தம் ஆடி கொடி இறக்கதின் பின பிராயச்சித்தம நடத்தல் போல தேர்தல் முடிந்ததும் பொது சனங்களுக்கு ஒரு பிராயச்சித்தம் செய்தல் மிகமிக அவசியமாகின்றது.

## புகையிரதப் பகுதியாரின் போக்கு

சென்ற செவ்வாய்க் கிழமை (6-5-52) இந்திய அரசாங்க உபதலைவர் Dr. இராதாகிருஷ்ணன் அவர்கள் வரவை, புது டெல்கியில் புகையிரதப் பகுதி உயர்தர உத்தியோகஸ்தர் எதிர்பார்த்திருக்கனர். புகையிரத வரவுக்குக் குறிக்கப்பட்ட நேரம் அவர்கள் புகையிரத நிலயத்துக்குப் போன பொழுது அரசாங்க உபதலைவர் அரசாங்க மாளிகைக்குப் போய் விட்டாரென அறிந்து ஏமாந்தனர் இதற்குக் காரணம் புகையிரதம் பத்து நிமிஷம் முந்திவந்தமையாம்.

எங்கள் வடஇலங்கைப் புகையிரதம் பிந்தி ஓடுவதையே வழக்கமாபுடையதெனினும் சில தருணங்களில் முந்தி ஓடி இவ்வித கெட்டித்தனங்களையுஞ் செய்கிறது. எந்தப் பக்கத்தாலும் விளைவு வசதியீனமே.

## செய்தித் திரட்டு
=0=

பள்ளிக்கூடங்களிலுள்ள ஆசிரியர் தொகை இடாப்பில் உள்ள பிள்ளைகளின் தொகைக் குத்தக்கபடி யன்றி தினசரி வரவுக்குத் தக்கபடி கிச்சயிக்கப்படுமென அறிய வருகிறது.

x x x

தென் ஆபிரிக்க தொழிலாளர் பொதுச் சங்கம், தென் ஆபிரிக்காவிலுள்ள எல்லாச் சாதி மக்களும், எல்லாநிற மக்களும் ஒன்று சேர்ந்து தென் ஆபிரிக்க அரசாங்கத்திட்டம் அமைக்கும்படியும் அப்படி அமைத்த பின்பே பொதுத் தேர்தல் நடத்தும் படியும் மலான் அரசாங்கத்துக்கு அறிக்கையிடும்படி ஐக்கிய தேசிய மகாநாட்டாரைக் கேட்டிருக்கின்றது.

x x x

கொழும்புத்திட்டத்தின்படி, மகாஇலுப்பாலமா என்னும் இடத்தில் அமைக்கப்படும் விவசாய ஆராய்ச்சி நிலயத்துக்கு, நியூஸிலந்து அரசாங்கம் 250,000 பவுண் நன்கொடை கொடுக்கின்றது.

## பிரகடனம்

திருவாதவூரடிகள் புராணம் உரையாசிரியர்: ம. க. வேற்பிள்ளையவர்கள் செய்த பொழிப்புரையுடன் விலை ரூபா 2-00

பிரதோஷவிரதமான்மியம் (புதிய பதிப்பு) சிவவிரதங்களுட் சிறந்தாகிய இவ்விரத காலத்திற் சுவாமி கும்பிடவேண்டிய ஒழுங்கு, இதனை அநுட்டிக்க வேண்டிய முறை, புத்தி பூர்வமாகவும் அபுத்தி பூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது; விலை சதம் 40

வில்லி பாரதம் - புட்ப யாத்திரைச் சருக்கம் பண்டிதர், ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய நுண்பொருள்விளக்க விரிவுரை நூலாசிரியர்வரலாறு முதலியவற்றுடன், 1951ம் 52ம் ஆண்டுகளில் நடக்கும் தமிழ்ஆங்கில S. S. C. (எஸ். எஸ். ஸீ.) பரீட்சைகட்குப் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது, (2-ம் பதிப்பு விலை ரூ. 1—25ச

அரிச்சந்திர புராணம் - மயானகாண்டம் மேற்படி பண்டிதர் எழுதிய பொழிப்புரை இலக்கணக் குறிப்பு. நூலாசிரியர்வரலாறு முதலியவற்றுடன் உயர்தர வகுப்புக்களுக்குச் செய்யுட்பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது. விலை சதம் 75.

மாணிக்கவாசகசுவாமிகள்சரித்திரம் திருவாசகத்திரட்டுடன் மேற்படி பண்டிதர் எழுதியது; கொழும்பு விவேகானந்தசபையார் நடத்தும் சைவசமயபாடப்பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாக விதிக்கப்பட்டது. விலை ரூ. 1—20 ச.

உலகம்பலவிதக்கதை I. (கோபாலநேசரத்தினம்) ஷை பண்டிதர் எழுதியது. படிக்கப்படிக்கத் தெவிட்டாதது. விலை ரூ. 1—25ச

ஈழமண்டல சதகம்: ஆசிரியர் ம. க. வேற்பிள்ளை இயற்றியது இலங்கையின் மான்மியத்தை எடுத்து விளக்குவது; விரிவுரையுடன் விலை ரூ. 1-00

சைவசமயசாரம்: ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம் (B. A.) அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்தசபையார் நடத்தும் சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்றுயுள்ளது. விலை ச 45.

"ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்) சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கிலமறிந்தோர் எவரும் படிக்கத்தக்கது. முக்தி வெளிவராதது. விலை 60 சதம் (அணு 10)

புலியூர் (யமக) அந்தாதி மாதகல் மயில்வாகனப்புலவர்இயற்றியது ஆசிரியர் ம. க. வேற்பிள்ளைசெய்த உரையுடன் விலை சதம் 50.

முற்பணமனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்.

Apply: to PANDIT V. T. SAMBANDHAN Vannarponnai, Jaffna


# சாலாமிஸரி லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, நெஞ்செரிவு, கை கால வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, சூலை, சந்துவாயுவு முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனி போல் நீங்கும். தேகபுஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிகமாய்க் காணுதலால் நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒருறுத்தல் விலை ரூபாய் 25-00, அரைறுத்தல் விலை ரூபாய் 12-50, கால்றுத்தல் விலை ரூபாய் 6-75
வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.
வி. பி. பி: மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்.

## சிவஞான பற்பொடி

சிவஞான பற்பொடியினுல் காலை பல் விளக்கி வந்தால், வாய் நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் அரணை கட்டல், பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.

பொட்டணம் 1-க்கு விலை சதம் 25

K. ஆறுமுகம்பிள்ளை

எமது விலாசம் நி. 3/1 தட்டாதெரு
M 196 1-2—30-4-52. கோட்டைமுனை, மட்டக்களப்பு.


உண்மையே உயர்த்தும் ஏணி


திறமான
தேக்க மரங்கள்
பல தினிசுகளிலும்

திறமான
ருணிமார்க் ஓடுகள்
13¾, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
Std. 2 ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org